உ

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சிவநெறி



பூரித்து மலர்தூவி அர்ச்சித்து நெஞ்சாரப் பூசைசெய்மின்
ஈரெட்டுத் திக்கும் இடமாகக் கொள்ளும் எழிற்புயத்தில்
தாரிட்டு மாலை தரித்திட்ட கைகள் தனம்பெருக
நேரிட் டருள்செய் வாள்பத் திரகாளி நித்தமுமே.

–கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரனார்


மலர் 9

இதழ் 1


விலை 15/=


திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்





நல்ல சொற்பொரு ணாளு நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்
வல்லவைக்குரி யானை வாழ்த்துவோம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# சிவநெறி

## முத்திங்கள் இதழ்

## SIVANERI - QUARTERLY MAGAZINE

பிரமாதி விக்கிரம வருடம் தை, புரட்டாதி- 2000

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை வெளியிட்டு வரும் காலாண்டு சஞ்சிகை "சிவநெறி" அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவருட் கருணையால் ஒன்பதாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது.

ஒன்பதாவது ஆண்டின் முதலாவது இதழை குறிப்பிட்ட காலத்தில் தவிர்க்க முடியாத காரணங்களினால் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டதற்கு அருளன்பர்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம்.

லோகமாதாவாய், தயாபரியாய், ஈஸ்வரியாய், காமாட்சியாய், கொற்றவையாய் அடியார்க்கு அருளும் பத்திரகாளி அம்பாளின் திருப்பாதங்களில் புதிய நூற்றாண்டின் முதலாவது "சிவநெறி" இதழைச் சமர்ப்பித்து, எதுவித விக்கினங்களும் இன்றி தொடர்ந்து "சிவநெறி" வெளிவருவதற்கு அம்பாளின் ஆசியை வேண்டு கின்றோம்.

"சிவநெறி" அன்பர்களுக்கும் சைவப் பெருமக்களுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# எங்கும் நிறைந்தவள் எங்கள் பத்திரகாளி

காளி தேவி வணக்கம் சிறு தெய்வ வணக்கத்தின் பால் பட்டது என்று சிலர் நினைக்கின்றார்கள். அது தவறு. காளி, ஆதிபராசக்தி யின் அம்சம் என்பது தான் பெரியோர்கள் கண்ட முடிபு ஆகும்.

சுவாமி இராமகிருஷ்ண பரமகம்சர் காளி உபாஸகராகவே தமது ஆத்மீக அனுபவத்தை ஆரம்பித்தார். காளி தேவி அவரோடு பேசும் தெய்வமாக, வாழும் தெய்வமாக, உயிர்த்துடிப்போடு விளங் கினாள்.

"கடவுளைக் காட்ட முடியுமா?" என்று கேட்ட நரேந்திரனுக்கு ஆம், என்று பதில் கொடுக்கும் துணிவைப் பரமகம்சருக்கு அளித்தவள் காளிமாதாவே தான். கல்கத்தாவில் உள்ள காளி விக்கிரகத்தின் மூக்குத் துவாரத்தின் முன்னால் ஒரு துரும்பை நீட்டினார் இராமகிருஷ்ணர். காளியின் சுவாசம் பட்டு அந்தத்துரும்பு முன்னும் பின்னுமாக அசைந்தது. அந்தக் கணமே தெய்வம் என்று ஒரு சக்தி உயிரோடிருப்பதை நரேந்திரன் உணர்ந்தான்.



அதுவரை தெய்வம் உண்டா இல்லையா என்ற சந்தேகத்தில் தவித்த ஒரு நாஸ்திகரான நரேந்திரன் பின்னர் சுவாமி விவேகானந்தரானார். அமெரிக்காவில் இந்து மதத்தை முழங்கினார். உலகம் வியக்கும் ஞானத் துறவியானார். இது காளிதேவி அன்று அளித்த பிச்சைதான்.

உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் சக்தி எங்கும் எதிலும் நிறைந்த ஆதிபராசக்தியே. அந்த நிறைசக்தியின் தோற்றமே காளி. இந்த மகத்துவத்தை வரகவி சுப்பிரமணிய பாரதி தமது கவிதையில் நான்கு வரிகளில் தேங்கி நிற்கும்படி செய்துவிட்டார்.

யாது மாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் - காளி நின்
தெய்வ லீலை யன்றோ?

என்பவை தான் பாரதி பாடிய அந்த ஞானபூர்வமான வரிகள்.

இந்த வரிகள் மூலம் அகண்டாகரமாக நிறைந்த தெய்வ சக்தியின் தோற்றமே காளி என்தையும், அண்ட சராசரங்களில் இடம்பெறும் இயக்கங்கள் அனைத்துக்கும் உந்து சக்தியாக விளங்குபவளும் காளி தான் என்பதையும், பாரதி தத்துவமாக கூறிவிட்டார்.

இவ்வளவு சக்திவாய்ந்த காளி தேவிக்கு திருக்கோணமலையிலும் ஓர் அற்புத ஆலயம் அமைந்திருக்கின்றது.

அது மிகவும் சக்தி வாய்ந்த ஆலயம் என்பது எமது முன்னோர் அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

அமரர். எஸ். டி. சிவநாயகம்
முன்னாள் ஆசிரியர்
(தினபதி, சிந்தாமணி)
கொழும்பு

திருக்கோணமலை
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
பிரதம குருவும், ஆதீனகர்த்தாவுமான

வேதாகமமாமணி

# சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள்

அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

சக்தி வழிபாடு மிகவும் தொன்மையானது. இயற்கைக்கு இறைமைத்தன்மை கற்பிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே சக்தி வழிபாடு உருவானது.

ஈழத்திரு நாட்டில் உள்ள சக்தி பீடங்களில் திருக்கோண மலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் வரலாற்றுச் சிறப்புக் கொண்டது. இவ்வாலயம் பதினோராம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது வரலாற்றாசிரியர்களின் முடிபாகும்.

அண்டங்கள் யாவையும் ஈன்று பராபரிக்கும் உலக அன்னை வழிபாடாக இன்று சக்தி வழிபாடு விளங்குகின்றது.

அள்ளி வழங்கும் அன்னபூரணியாக, தாய்த் தெய்வமாக ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருள் பாலித்து வருகிறாள்.

சக்தி என்பது இறைவனின் வல்லமை சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவம் இன்றேல் சக்தி இல்லை சிவத்தினின்றும் சக்தியைப் பிரிக்க முடியாது.

திருக்கோணமலை மாவட்ட இளைஞர் பேரவையின் காலாண்டு சஞ்சிகையான "சிவநெறி" யின் ஒன்பதாவது ஆண்டின் முதலாவது இதழ், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தை ஒட்டி, அம்பாளின் வரலாற்றுச் சிறப்புக்களைக் கூறும் சிறப்பிதழாக வெளிவருவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளை உள்ளன்புடன் பரவி, அன்னையின் அருட்பார்வைக்காளாகி பல வித நற்பேறுகளையும் பெற்று அனைவரும் வாழ அம்பாளின் திருவடியை இறைஞ்சுகின்றேன்.

*வேதாகமமாமணி சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள்*
பிரதம குரு, ஆதீனகர்த்தா
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருக்கோணமலை.

# இராஜ கோபுரம் காணும்

## வேதாகமமாமணி:- பிரம்ம ஸ்ரீ சோ. ரவிச்சந்திர குருக்கள்

அந்த மழை நாளின் மாலைப்பொழுதின் விடியலில் தான் அவரைச் சந்தித்தேன். காளி அம்பாள் தேவஸ்தானத்தின் மேற்கு வீதியில் அமைந்திருக்கும் சிற்றோட்டு கூரையின் கீழ் எமது சந்திப்பு நிகழ்ந்தது. விட்ட மழை மெல்ல தூறி பெரு மழையாகி முற்றத்தில் வெள்ளம் வழிந்தோடிக்கொண்டிருந்தது.

பிரம்ம ஸ்ரீ சோ. ரவிச்சந்திர குருக்கள் எந்த வித "அந்த பெரிய குருக்கள் ஐயா" என்ற மமதையுடன் அல்லாது என்னோடு ஒருவனாகி என்னுடைய அசட்டுத் தனமான வார்த்தைகளுக்கு தன் வாயினை திறந்து மிக அமைதியாக ஒரு நண்பனைப்போல கலந்து கதைத்து கொண்டே இருந்தார். கொழும்பில் இராமகிருஸ்ண சங்க மண்டபத்தில் இந்து கலாச்சார அமைச்சினால் நடாத்தப்பட்ட விழாவில் குருக்கள் ஐயா அவர்களுக்கு வேதாகமமாமணி பட்டம் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளால் அமைச்சர் தேவராஜ் அவர்கள் முன்னிலையில் கொடுக்கப்பட்டது.

**அநுபவ கட்டுரை**
**இ.சி.சுந்தரலிங்கம்.**

திருக்கோணமலை இரத்தின சிங்க பிள்ளையார் தேவஸ்தானத்தால் பக்த கிரியா திலகம் என்ற பட்டமும், திருக்கோணேஸ்வர மணிக்கோபுர கும்பாபிஷேகத்தின் போது சாத்வீக ஞானமணி என்ற பட்டமும், ஆலடி பிள்ளையார் தேவஸ்தானத்தால் 1996 கும்பாபிஷேகத்தின் போது சக்தி பீடாதிபதி என்ற பட்டமும் அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகத்தின்போது பிரதிஷ்டா ஞானபூஷணம் என்ற பட்டமும் பெற்றுக் கொண்டவர் எமது குருக்கள் ஐயா அவர்கள். இப்படியானவரோடு பேசப்போகுமுன் எனக்குள் ஒரு வித பய உணர்வும் இருந்தது. எனது கேள்விகளை அவர் உள்வாங்கி எதை எதையோ சொல்ல வீணான பிரச்சனைகளுள் நான் மாட்டிக்கொள்வேனோ என்பது தான் அந்த எனது பய உணர்வுக்கு காரணம். இருந்தாலும் கேட்டு விட வேண்டும் என்ற மனத்துடிப்பும் அந்த பய உணர்வை மிஞ்சி நின்றதால் எனது வார்த்தைகளை அளவோடும் அவதானமாகவும் பிரயோகிக்க முற்பட்டு கொண்டிருந்தேன்.

"காளிகோயிலா அதுதான் திருகோணமலையில் திருப்பதி கோயில் ஆச்சே. காளி ஆச்சி பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் முளிச்சுக்கொண்டு தானே இருக்கிறா. அதுதான் இந்த ராஜ கோபுரம் போல" இப்படியான வார்த்தைகளை நான் காதுகளால் பல இடங்களில் கேட்டிருக்கின்றேன்.

இந்த வார்த்தைகளை எப்படி குருக்கள் ஐயாவிடம் கேட்பது ? கேட்டால் அவரின் மனநிலை எப்படியாக இருக்கும் ? எனது முதல் எண்ணமே வீனான மனத்தாங்கலை உண்டு பண்ணி விட்டால் ........ என்றாலும் வந்து விட்டேனே கேட்டே ஆக வேண்டும் தானே!! கடவுளே கேட்டே விட்டேன். அவரின் முகத்தின் மாற்றத்தை எண் கண்கள் கவனித்தன. அவரின் கண்கள் சிரித்தன. முகத்திலும் அதே சிரிப்பின் சாயலே. நான் காதுகளை கூர்மைப்படுத்தினேன்.

உங்கட ராஜ கோபுர பேச்சு உண்மையான பேச்சுத் தான். வெளியில் நின்று வேடிக்கை பார்ப்பவர்களுக்கு அது உண்மையான பேச்சுதான். ஆனால் உள் வந்து ஒரு கோயிலை நடத்துகிற பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து பார்த்தால் அந்த பேச்சில் எந்தளவும் உண்மை இல்லையென்பது கூறுபவர்களுக்கே புரியும். அவர்கள் வரமாட்டார்கள். அவர்களுக்கு உண்மையும் தெரியாது. ஏனென்றால் அவர்கள் வெறும் வாய்ச்சவாடல் மன்னர்கள்தான்.

இஞ்ச பாருங்க உங்களுக்கு நான் புதிதாக ஒன்றும் சொல்லத் தேவையில்லை. நீங்களும் இப்போது ஒரு கோவிலை நடத்திக் கொண்டு தானே இருக்கின்றீர்கள். உள் பிரச்சனைகள் உங்களுக்கு விளங்கித்தானே இருக்கும்.

நான் "சிவன் கோவிலை" நினைத்துப் பார்த்தேன். அப்படி அந்த உள் பிரச்சனைகள் என்ன... என்ன.... நிமிட நேரம் என் சிந்தனையை அவர் கலைக்கவில்லை. பின்னரே பேசினார்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" இதை கேள்வி பட்டு இருப்பீங்க தானே. நான தலையாட்டினேன். அந்த கோடான கோடி உயிர்களை ரட்சிக்கும் எம் சீமாட்டிக்கு கோபுரம் அமைக்க வேண்டும் என்ற சிந்தனை எனது தந்தையார் காலத்திலே என் மனதில் விதைக்கப்பட்ட விதையொன்றே. எனது தந்தையார் பிரம்ம ஸ்ரீ சு. சோமாஸ்கந்த குருக்கள், அவரின் தந்தையார் சுவாமிநாத குருக்கள் இவரின் முன்னோர்கள். இப்படி வழி வழியாய் ஏழு தலை முறை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் வழி நடத்தப்பட்டு இன்று என்னோடு நிற்கின்றது.

எனக்கு பதினொரு வயதில் பூணூல் சடங்கு பிராம்மண சாஸ்திரிய விதிகளுக்கு அமைய நடைபெற்றது. சிறு வயதில் இருந்தே தந்தையாருடன் கோயில் காரியங்களில் நானும் சேர்ந்து கொள்வேன். நான் இந்துக்கல்லூரி மாணவன். என்னுடைய நண்பர்கள் முற்றவெளி மைதானத்தில் பந்தடிக்கும் போது நான் கோவில் காரியங்களில் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பேன்.

பந்து நிலையை விட பக்தி நினைவுதான் என்னுள் கோவிலில் என் இளமை பராயத்திலேயே ஏனோ என்னை மனம் ஈடுபாடு வைத்தே விட்டது. அம்பாளின் அருள் பார்வையோ என்னமோ என்னுல் அம்பாளின் முகம் பார்க்காதிருக்கவும், கோயில் காரியத்தில் ஈடுபடாது இருக்கவும் முடியவில்லை. என்னையறியாமலேயே என் தந்தையின் பின்னால் நானும் கோவிலும் ஒன்றானோம் நண்பர்களானோம்.

'இராஜகோபுரம்' என்று நீங்கள் நினைவூட்டியதாலும் போதிய பணம் இருப்பதாலுமே இந்த இராஜகோபுரம் கட்டப்படகின்றது. என்ற பிழையான கருத்துக்கும் எனது வாழ்வில் சில நிகழ்வுகளை நினைவூட்டினால்தான் நீங்களும் உண்மையை உணர்ந்து கொள்ளுவீர்களென்று நான் நினைக்கின்றேன்.

எனது குருவாக திருக்கோணமலை சிவன் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து அமரரான பிரம்மஸ்ரீ சண்முகரெத்தின குருக்கள் ஐயாவும் பின்னர் யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மகாதேவவாத்தியாரையும் அடைந்தது பெரும் பாக்கியமென நான் கருதுகின்றேன். என் தந்தையாரும் எனக்கு வேத, ஆகம, பூசை முறைகளை அறிய போதியளவு ஊக்கத்தைத் தந்தார். அவரின் மேற்பார்வையில் இளமையிலேயே கோவில் வேலைகளில் என்னை நானே தயார்படுத்திக் கொண்டேன். சாத்துப்படி வேலைகளில் அதாவது சுவாமி அலங்காரங்களை நான் இன்று சிறப்பாக செய்கின்றேன் என்றால் அந்த பெருமை என் தந்தையாரையே சாரும். கோவில் நித்திய, நைவேத்திய பூசைகள் எல்லாம் எனக்கு இளமையிலேயே என்னையறியாமலேயே இரத்தத்தோடு இரத்தமாக கலந்தவைகள் ஆகிவிட்டன.

கோவில் நிர்வாகத்தில் எனத தந்தையின் பயிற்சியும் பிரம்மஸ்ரீ சன்முகரெத்தின குருக்கள் ஐயா அவர்களின் வேதாகம பயிற்ச்சியும் இவைகளின் தாக்கமுமே என்னுள் இன்று பொதிந்து இருக்கின்றன. மற்றப்படி முழுமையாக எல்லாம் பத்திரகாளி அம்பாளின் திருவருட் கடாச்சமுமே.

நான் க. பொ. த சாதாரண தரத்தில் படித்துக் கொண்டிருந்தபோது எனது தந்தையாருக்கு கண்களில் சுகயீனம் ஏற்பட்டது. பதினாறு வயதினேலே என் தந்தையாரின் சுகயீனத்தால் கோவில் நிர்வாகம் என் தலைமேல் சுமத்தப்பட்டது. இளமையில் தந்தையின் பின்னால் கோவில் காரியங்களில் என்னை நானே ஈடுபடுத்திக் கொண்டிருந்ததால் கோவில் என் தலைமேல் சுமத்தப்பட்ட சுமையாக நான் கருதவில்லை. நிறைவாகவே தைரியத்துடனேயே ஏற்றுக் கொண்டேன். தகுதியான ஆச்சாரிய பெருமக்களைக் கொண்டு கோவில் கடமைகளை செய்வித்தேன். 1983ல் எனக்கு குருப்பட்டம் கிடைக்கும்வரை கோவில் நித்திய பூசைகளை நானே செய்தேன். திருவிழா விஷேட கால தேவைகளுக்கு ஆச்சாரிய பெருமக்களைக் கொண்டு அம்பாள் தேவஸ்தானத்தை ஆராதித்து வந்தேன். பிரம்மஸ்ரீ சாமி விஸ்வராத குருக்கள் ஐயா அவர்கள் எனக்கு குருப்பட்டம் தந்த ஆச்சாரிய பெருமகன் ஆவார்.

அதன் பின்னர் 1985இல் தந்தையின் மரணத்தின் பின்னர் இருவருடங்கள் கழித்து 1987இல் என் திருமணம் நடந்தது. யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியைச் சார்ந்த பங்குருகந்த சுவாமி கோவில் குருபீடத்தைச் சார்ந்த செல்வி சகுந்தலா தேவி என் மனைவியாகும். எனக்கு மூன்று ஆண் குழந்தைகள் உள்ளனர்.

நானறிய 1933, 1944, 1962, 1980, ஆண்டுகளில் அம்பாளுக்கு கும்பாபிஷேகம் நடந்துள்ளது.அம்பாளின் அருள்கடாட்சத்தால் இவ்வருடம் 2000 ஆண்டுக்குள் மற்றைய கும்பாபிஷேகமும் நடைபெற உள்ளது. இராஜகோபுர வேலைகளும் முடியும் தருவாயில் உள்ளது.

எனது தந்தையார் காலத்தில் தேர் செய்வதே பெரும் காரியமாக அவருக்கிருந்தது. ஆனாலும் அவரின் ஆர்வமான பேச்சில் என்றோ ஒரு நாள் அம்பாளுக்கு இராஜகோபுரம் அமைந்தே தீருமென்ற ஏதோ தெய்வ வாக்கும் இருந்தது. அந்த தெய்வ வாக்கின் வடிவம் தான் அம்பாளின் அருட்கடாட்சந்தில் கட்டப்படும் ஏழு தளம் கொண்ட இந்த இராஜகோபுரம்.

மிக, மிக கஷடப்பட்டே 1970 – 1973 காலப்பகுதியில் மூன்று சித்திரத்தேர் அம்பாள், முருகன், பிள்ளையார் முதலியோருக்கு உருவாகியது. 1980 ஆடி வரை திருவிழா காலங்களில் பக்த அடியார்களின் பரவச பக்தி வெள்ளத்தில் மூன்று சித்திர தேர்களும் வீதிகளில் ஓடின. இக்காலப் பகுதியில் தேவஸ்தானத்துக்கு மஞ்சம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. 1980 இல் ஏற்பட்ட தீ விபத்தில் முருகன், பிள்ளையாருக்குரிய சித்திர தேர்களும், மஞ்சமும் இன்னும் சில கோவிலுக்கு தேவையான சில வாகனங்களும் எரிந்து சாம்பலாயின. ஆனால் அம்பாளுக்குரிய சித்திர தேர் எரியவில்லை. இந்த இழப்பு எனது தந்தையின் நோயின் வேகத்தை கூட்டியது. அம்பாளின் தேர் தப்பியது சிறிது ஆறதலையும் தந்தது. சதா தேரின் சிந்தனையில் தன்னைத் தானே வருத்திக் கொண்டிருந்தார் எனது தந்தை. அவருக்கு இருந்த ஒரே ஆறுதல் நான் மட்டுமே.

ஒருசத காசுமின்றி அம்பாளின் மேல் நேர்த்தி வைத்து மக்களின் உதவி கோரி கையேந்தினோம். சித்திரதேர்களும் உருவாகின. 1991 ஆண்டில் கல்யாண மண்டபமும் கட்டப்பட்டது. 1992 ஆண்டில் துர்க்கையம்மனுக்கு கோவில் கட்டப்பட்டது. கோவிலுக்கு தேவையான சிங்க வாகனம், குதிரைவாகனம், கைலாசவாகனம், சப்பரம், மஞ்சம் இப்படி சகல தேவைகளும் நிறைவேற்றப்பட்டன. இவைகள் எல்லாம் எனது காலத்திலேயே நடைபெற்றாலும் என்னுள் மூர்க்கத்தனமாக என் தந்தையாரே நிறைந்திருந்தார்.

வசதிக்காரஅம்பாள் என்று சொன்னீர்களே உண்மைதான். அந்த வசதியெல்லாம் எப்படி, எப்படி உருவெடுத்தன என்பது தற்போது உங்களுக்கு புரிந்திருக்குமென் நான் நம்புகின்றேன் என்று கூறி என்னை அசட்டுச் சிரிப்போடு குருக்கள் ஐயா பார்த்தார்.

"உண்மைதான்" – நான் சொன்னேன். எனக்கும் சில உண்மைகள் விளங்கின.

இஞ்சாரும் திருவிழாக் காலங்களில் மக்களிடம் இருந்து பெறப்படும் பணத்தை விட மூன்று மடங்கு செலவழித்தே திருவிழாவை நாம் நடாத்துகின்றோம். ஏன் உங்கள் மனதில் குறியாக இருக்கும் காப்பு விரதமிருக்கே அதில் வரும் தொகையான பணத்தை விட ஏற்படும் செலவையும் சிறிது நீங்கள் கணக்கிட்டு பார்க்க வேண்டும். அப்படி பெரிதளவாக மிச்சம் ஏற்படுவது இல்லவே இல்லை. அத்தோடு எமது தேவஸ்தானத்திற்கு சொந்தமான காணிகளோ வயல்களோ இல்லை. ஆகவே வெளி வருமானங்கள் ஏதுமின்றியே எமது தேவஸ்தானம் இன்று உள்ளது. அதையும் நீங்கள் கவனிக்கவேண்டும்.

ஏன் மக்களின் பங்களிப்பிலேயே முற்றுமழுதாக இவ் ஆலய கும்பாபிஷேகத்தினை நடாத்திமுடிக்க புணருத்தாரண வேலைகளை செய்ய ஆரம்பித்துள்ளேன். இந்த இராஜகோபுரம் அமைக்க நாம் எண்ணியபோது எமக்கிருந்த ஒரே துணைஅம்பாளே. கையில் சிறய தொகையை வைத்துக் கொண்டே வங்கியில் எடுக்கப்பட்ட கடனைக் கொண்டு $1^1/_2$ கோடி வேலைக்கான பணத்தை திரட்ட முடிவெடுத்தோம். எல்லாம் அம்பாளின் மேல் அவளின் அற்புத கருணையின் சக்தியை முன்னே வைத்தே நாம் காரியத்தில் இருக்கிறோம். மக்கள் அள்ளிக் கொடுத்தார்கள். இராஜகோபுர வேலைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இந்த இராஜகோபுரம் ஏழு தளம் கொண்டது. தமிழ் நாட்டைச் சார்ந்த வலங்கமான் என்ற இடத்தைச் சார்ந்த திரு. இராஜேந்திரன் ஆச்சாரியாரின் குழுவினரின் பொம்மை வேலைகளும், திரு த. ரவீந்திராசா ஆச்சாரியார் குழுவினரின் கட்டுமானமும் தான் என்னை இவ்வளவு விரைவாக இராஜகோபுரத்தை முடிக்க துணைபுரிந்தது.

எங்கள் புணருத்தாரணத்தில் தேவஸ்தான ஆதிமூல தூபி திரிதல தூபியாக அமையஉள்ளது. லட்சுமி, சரஸ்வதி, துர்க்கை இப்படி பல தெய்வங்கள் அமையவுள்ளன. சிங்கள மக்கள் நிறைய வருகிறார்கள். அவர்கள் பௌத்தமதத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் அம்பாளை நம்புகிறார்கள். அதற்காக அவர்கள் மதம் மாற வேண்டுமென்ற சட்டம் இல்லை. நம்பிக்கை எங்கேயோ அங்கேயே நம்பிக்கையும் உருவாகும். அவர்கள் பூசைக்கு பணம் கட்டுகிறார்கள் அபிஷேகங்கள் செய்வது குறைவு. இருந்தாலும் அவர்களின் நம்பிக்கையினை அம்பாளின் திருவருளினை நீங்கள் இங்கு வரும் போதும் உணர்ந்திருப்பீர்களே! ஏன் திருக்கோணமலையில் ஏற்பட்ட இனக்கலவரங்களில் எப்போது ஒரு காலத்திலாவது எமது தேவஸ்தானம் தாக்கப்பட்டோ, சிறு இழப்போ ஏற்பட்டதில்லை. காரணம் அம்பாளின் மேல் ஏற்பட்ட பிரியம் தானே பெரும்பான்மை மக்கள் போற்றும் பக்தி செலுத்தும் தலமாக எமது தேவஸ்தானம் இன்றுள்ளது.

வருவாய் மிகுந்த கோவில் என்பதால் சமூகம் பற்றிய தேவைகள் ஏதாவது நிறைவேற்ற உங்கள் மனதில் ஏதும் திட்டங்கள் உண்டா என நான் இராஜகோபுரம் பற்றிய சிந்தனையை மாற்ற வினாவொன்றைப் போட்ட போது மீண்டும் அதே முகம் .. அதேசாயல்...
(வருவாய் உண்டு அதன் தேவைகளும் உண்டு என்பதற்காகத்தான் இவ்வளவு விளக்கமும் தந்தேன். நீங்கள் மீண்டும் மீண்டும் அதே பாணியில் நின்றால் .....)

ஐயா.. உங்கள் தேவைகள் நிறைவேறினால் பின்னர் ஒரு வைத்தியசாலையொன்றை உருவாக்கி அல்லது பாடசாலை ஒன்றை உருவாக்கி அதை நிர்வாகம் பண்ணினால் அது ஒரு சமூகத்தின் தேவையை நிறைவேற்றும் அல்லவா.

குருக்கள் ஐயா சிரித்தார். முடியாததை சொல்லக்கூடாது. முடிந்ததுகளையும் சொல்லக்கூடாது. ஆனால் நீங்கள் மீண்டும் மீண்டும் என்வாயைக் கிளறுவதால் சொல்கின்றேன். நீங்கள் கருதும் அமைப்பு ரீதியாக பத்திரிகைகளுக்கு படம்போட்டு, மாலைபோட்டு பலர் அறிய நீங்கள் நினைக்கும் அந்த சமூக தேவையை நான் செய்ய விரும்பவில்லை.

என் தகுதி, என் இருப்பு, என் விருப்பம் இவை மூன்றையும் கருதி என்னை நாடியவர்களுக்கு இடது கையறியாவண்ணம் உதவியும், உதவவும் உள்ளேன். ஆனால் நீங்கள் குறிப்பிடும் சமூக தேவை கருதி என் மனதில் வடிவான படமொன்றும் போட்டுள்ளேன். எல்லாம் என் செயல் அல்ல. எல்லாம் அருட்சக்தியாக, எங்கும் நிறைந்த அந்த அம்பாளின் கருணையின் வடிவிலேயே உள்ளது. திருவருள் கூட்டட்டும் உங்கள் பிரார்த்தனையும் நிறைவேறட்டும்.

தொடர்ச்சி 14ம் பக்கம்

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

இறைவனை வழிபாடு செய்வதற்குரிய இடம் ஆலயமாகும். ஆலயமென்பது ஆன்மாக்கள் தமது மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை வழிபாடு செய்வதற்குரிய இடமாகும். அத்தகையதான ஆலயத்தின் அமைப்பில் முன் அமைந்திருப்பது கோபுரம் ஆகும்.

ஓர் ஆலயத்தின் கோபுரமானது அக்கோவிலின் பிரமாண அமைப்புக்கேற்றவாறு கோபுரமும் அமையும். ஆலயத்தின் முகப்பிலே தெரிவது கோபுரமாகும். இது கீழே அகன்று மேலே செல்லச் செல்ல ஒடுங்கி கலசங்களிலே நிறைவு பெறும் இதனை தூலலிங்கம் எனவும் கூறுவர். தொலைவில் வரும்போதே அனைவரது மனதிலும் பக்தியை தோற்றுவிக்க அதனை மிக உயரமாக அமைத்திருக்கின்றனர். கோபுரங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்து இருப்பதாலும் இதனை இராஜ கோபுரம் எனவும் அழைப்பர். இக்கோபுரத்திலே கர்பக் கிரகத்தில் இருக்கக் கூடிய மூல மூர்த்தியின் அருட்செயல்களையும் திருவிளையாடல்களையும் காட்டும் உருவங்களும் காட்சிகளும் அதன் கண் அமைந்திருப்பதை பார்த்த வணணத்தே கர்ப்ப கிரக மூர்த்தி இது தான் என நாம் அறிந்து கொள்ள முடியும். அத்தோடு இறைவனது திருவிளையாடல்களையும் அறிந்து கொள்ள முடியும்.

கோபுரங்கள் பத்து வகைப்படும் என்று மனசாரத்தில் கூறப்படுகிறது. இவற்றில் எட்டு வகையானவையே எடுத்துக் கூறியுள்ளன. ஸ்ரீ போகம், ஸ்ரீ விசாலம், விஷ்ணுகாந்தம், இந்திரகாந்தம், பிரம காந்தம், ஸ்கந்த காந்தம், சிகரம், சௌமிய காந்தம் எனப்படுபவையாகும்.

பொதுவாக ஆலயங்கள் கிழக்கு நோக்கியே இருப்பதை காணலாம். வடக்கு மற்றும் மேற்கு நோக்கி அமையும் ஆலயங்களும் உண்டு. இவ்வாறாக அமைந்த ஆலயங்களில் ஒரு கோபுரம் மட்டும் இருப்பதுண்டு. வசதிகள் படைத்த ஆலயங்களில் பஞ்ச கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அதாவது மத்திய கோபுரம், பூர்வ கோபுரம், தஹிண கோபுரம், பச்சிம கோபுரம், உத்தர கோபுரம் என்று பெயர் பெறுகின்றன. இவ்வாறாக அமைந்த ஆலயம் இந்தியாவில் தமிழ் நாட்டில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் பஞ்ச கோபுரங்களை கொண்ட ஆலயமாகும்.

இக்கோபுரத்தின் தளங்கள் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, என முறையே அமைக்கலாம். இவை கோவில் அமைப்பிற்கும் இடத்திற்கும் ஏற்ப அமைப்பார்கள். இலங்கையில் மிகவும் உயர்ந்த கோபுரம் முன்பு மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆகும். இப்போது வல்லிபுர ஆழ்வாழ் கோவிலும் ஆகும். அவ்வாலயக் கோபுரத்தின் தளங்கள் ஏழு ஆகும். கோபுரக் கலசமும் இவ்வாறே 3, 5, 7, 9, என அமைப்பார்கள்.

சாகித்திய சிரோண்மணி
சிவஸ்ரீ குமார விக்னேஸ்வர குருக்கள்
(பிரதம குரு)
ஸ்ரீ விஸ்வநாத சுவாமி (சிவன்) தேவஸ்தானம்
திருக்கோணமலை

உள்ளம் பெரும் கோவில் ஊனுடம்பு ஆலயம் என்பர். திருமூலநாயனார் இறைவன் ஆன்மாக்கள் மேற்பற்றுடையவன் ஆகவே விரும்பி உறையும் இடமாகிய நமது உள்ள்த்தின் சரீரத்தின் புற வடிவமாக ஆலயம் விளங்குகின்றது. ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்கள் மனிதன் ஒருவன் தரையில் நேராக படுத்திருப்பது போன்ற தோற்றம் உடையது. கர்பக் கிரகம் தலையினையும், அர்த்த மண்டபம் கழுத்தினையும், மஹா மண்டபம் மார்பினையும் தரிசன மண்டபம் வயிற்றினையும், ஏனைய அலங்கார சபா மண்டபங்கள் காலினையும், இறுதியாக அமைகின்ற கோபுரம் பாதங்களையும் குறிக்கின்றது.

ஆகவே ஆலயம் எமது உடல் அமைப்பை ஒத்தது போல் விளங்குகின்றது. எமது உடலிலே ஓர் அங்கம் குறைவாக காணப்பட்டால் அழகு குறைந்தே காணப்படும். அது போலவே ஒரு ஆலயத்தின் முன் கோபுரம் அமைவது ஆலயத்தின் அழகிற்கும் பொழிவிற்கும் மேலும்அழகூட்டுவதுடன் அருளும் சுரக்கின்றது. அத்துடன் பல கலைகளையும், தத்துவங்களையும் விளக்கி நிற்கின்றது. ஆலயத்தின் உள் பிரகாரத்தில் சென்று தரிசிக்க முடியாதவர்கள் வெளியில் இருந்த வண்ணமே கோபுரத்தை தரிசித்து பலன் பெறுகின்றனர். திருகோணமலை புண்ணிய பூமியில் தம்பலகாமம் ஆதி கோணநாதப் பெருமான் ஆலயமும், கோணேசப் பெருமான் ஆலயமும், கோபுரத்துடன் பொழிவுடன் காணப்பட்டது. தற்போது மிகமிக விசாலமானதும் அழகுறவும் அமைக்கப்பட்டு வருகின்ற அருள் மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய புதிய இராஜ கோபுரம் திருமலை வாழ் மக்களுக்கு ஓர் புண்ணியமான வரப்பிரசாதமாகும்.

ஏற்கனவே இருந்த இரு கோபுரங்களுடன் மூன்றாவது புதிய கோபுரமும் சேர்ந்து முப்பெரும் கோபுரத்துடன் சிறந்து விளங்குகின்றாள் பத்திரகாளி அம்பாள். வேண்டும் அடியார்கள் வேண்டுவதை நல்லும் அம்பாளுக்கு ஒரு கோடி. அருள் இன்னமும் கூடி கோபுர தரிசன பலனும் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திப்போம். கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

# தேவியின் திருவடித் தியானம்

பரமாத்மா ஒன்றே. பரமாத்மா மூன்று வடிவம் எடுக்கின்றது. அந்த வடிவங்களை விஷ்ணு, ருத்திரன், பிரம்மா என்கிறோம். படைத்தல், காத்தல், அழித்தல், என்பன இந்த வடிவங்களில் தொழில்கள், இத்தொழில்களுக்கு ஏற்ப இவ் மும் மூர்த்திகளுக்கு குணம், வர்ணம், ரூபம் எல்லாம் இருக்கின்றன. இந்த மூன்று என்ற வட்டத்தைத் தாண்டும் போது இம்மூன்றுக்கும் காரணமான ஒரே பராசக்தி எஞ்சி நிற்கிறது. அந்த பாராசக்தியினை நாம் மனதால் தொழுதால் எல்லாத் துயரில் இருந்தும் நாம் விடுபடுவோம்.

**தி. பிரியந்தி**

இன்றைய உலகில் இதுபற்றி சிந்திக்க எமக்கு நேரம் இருக்கின்றதா? மந்திர தியானம், ரூபத்தியானம் பண்ணுவதற்கு எம்மிடம் பக்குவம் இருக்கின்றதா? ஏதாவது ஒரு மந்திரத்தை ஜெபிப்பதும், ஓர் உருவத்தை தியானிப்பது என்ற பழக்கம் மனசுக்கு வருவது கொஞ்சம் சிரமம்தான். என்றாலும் எமது மனதிற்கு இலகுவான ,பிடித்தமான வழியில் முதலடி எடுத்து வைக்கத்தானே வேண்டும். அதுதான் அம்பிகையின் திருவடி. எவ்வித சிரமங்களும் இன்றி எவரும் தேவியினுடைய சரண கமலத்தை தியானிக்கலாம். அந்த சரணகமலத்தின் அழகையும், குளிர்ச்சியையும் எமது மனம் பூரணமாக உணர்ந்து விட்டால்போதும். மனம் அதில் தானாகவே நிலைத்துவிடும். அந்த அற்புதத்தை இன்னும் திருக்கோணமலை பத்திகாளி அம்பாள் சந்நிதானத்தில் கண்கூடாகவே காண்கின்றோமே!

நாளாந்தம் இப்படியே எமது மனம் இதில் பக்குவப்பட்டுவிட்டால் போதும் அந்த ஆதி பராசக்தியின் திருவருள் கடாட்சத்தால் ஜனன நிவிருத்தி ஏற்படும். இதில் அப்படியான மனம்பக்குவம் இல்லாது போனால் வேறு வழிகளும் உள்ளன.

முதலில் பராசக்தியின் மகிமையைச் சொல்லும் துதிப்பாடல்களைப் படிக்கலாம். முதல்படி பாராயணம். பின்னர் ஜபம், அதன் பின்னர் தியானம் பண்ணுவது. அப்படி தியானம் பண்ணும் போது, “பராசக்தி இந்த உடம்பில் இருந்து உயிர் பிரியும் தருவாயில் உன்னையே நினைக்க வேண்டும். உன் உருவமே என் கண்களுக்குள் இருக்கவேண்டும். உன்னையே தியானம் பண்ணும் சக்தியும் இருக்க வேண்டும். உன்னிடமே மீண்டும் சேர்ந்திடும் உனது திருவருளும் எனக்கு இருக்கவேண்டும்”. என்று எமது தியானம் அமையவேண்டும். அல்லது பிராத்திக்க வேண்டும்.

இப்படி ஒவ்வொரு நாளும் பராசக்தியின் திருவருள் வேண்டி பிராத்தித்தால் உயிர் போகும் தருவாயில் பராசக்தியின் கடாட்சத்தால் அவளின் தியானம் வரும். இறந்த உடல் போனபின் இன்னோர் உடல் வராமல் அவளிடம் இரண்டறக் கலந்து உலக நரக வாழ்வில் இருந்து நாம் விடுபட்டு பேரானந்த உலகில் நாம் கலந்து விடலாம்.

தேவியும் குருவும் ஒன்றே. எனவே இருவரது திருவடியும் ஒன்றே. குரு பாதுகையும் தேவிபாதுகையும் ஒன்றே. குருபாதுகையை சந்திர மண்டலத்தில் தியானம் செய்ய வேண்டும். என்பதும் சாஸ்திரம். அமிர்தம் சந்திரனில் இருந்தே பொழிவதாகவும் சாத்திரம் சொல்லுகின்றது.

சூரியனின் சுயமான பிரகாசத்தால் ஒளியினைப் பெறுகின்றோம். ஆனால் தாபம் உண்டாகின்றது,வேர்க்கின்றது, தாகம் எடுக்கின்றது. அம்பாளுடைய பிரகாசம் நமக்கு ஒளியும் கொடுக்கின்றது. ஆனால் தாபத்தையும் நீக்கின்றது. எனவே அது சந்திரனின் அமிர்தம் பொழியும் ஒளிபோல இருக்கின்றது. அமிர்தம் எமக்கு தாபசாந்தி செய்ய வல்லது. அமிர்தம் தாபத்தை நீக்கி சாந்தியைக் கொடுத்துக் கொடுத்துக்கொண்டு பிரகாசிக்கின்றது. அம்பிகையின் கடாட்சமும் சரணாரவிந்தமும் இதுவாகின்றது.

நமக்கு சந்திர கிரகணம் மாதிரி தாபத்தை நீக்கி குளிர்மையைக் கொடுத்து ஆனந்தத்தை அளிப்பவள் அம்பிகை. அம்பிகை சந்திரமண்டலத்தில் வாசம் செய்வதாகப் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தியானம் மூலம் மனதில் குளிர்மையான இன்பத்தை நாம் அடைந்துவிட்டால் அம்பிகை எம்மிடம் குடி கொண்டவள் மாதிரி ஆகின்றது. நமக்கு இன்பம் கொடுக்கும் பெரு நிதி அவள்தான். ஆந்த பராசக்தியின் சரணத்தை தியானம் பண்ணி, சுத்தமாகி, நித்திய ஆரோக்கியத்தை நாம் அடைய முற்படுவோமாக.

(நன்றி:- தெய்வத்தின் குரல்)

**சிவநெறி**
**மலர்க் குழு** :- திரு.சி. குருநாதன் ஆசிரியர், திரு.கு. கோணாமலை
திரு.கா. சிவபாலன், திரு.செ. சிவபாத சுந்தரம்,
திரு.ந. ரவீந்திரன்,திரு.சு. கனகசபாபதி,திரு.க.க. உதயகுமார்,

# மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிசமைப்பதே சமய வழிபாடு

மனிதராகிய நாம் நன்கு சிந்தித்து செயலாற்றும் வல்லமையுடையவர்கள். நாம் பெற்றுள்ள மனிதப் பிறவியானது எமது பூர்வீக புண்ணியத்தின் பயன் என்பதை உபநிடதம் முதல் சித்தாந்தம் வரை விரிவாக விளக்குகின்றன. இப்பிறவியை நல்ல வகையில் பயன்படுத்தி பிறவி எடுத்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எம்மை நெறிப்படுத்தி வழிகாட்டுவது சமயவழிபாடேயாகும்.

சிவஞானம் மகேந்திரராஜா
கலாச்சார உத்தியோகத்தர்.
திருகோணமலை.

சமயமே எமது வாழ்க்கைமுறை, வாழ்க்கை முறையின் நம்பிக்கையிலேயே எமது வாழ்வு தங்கியுள்ளது என்றால் மிகையாகாது. இந்த நம்பிக்கையை எமக்கு ஊட்டுவதிலேயே சமய நூல்கள் துணைபுரிகின்றன. இதற்கு சமய சான்றோர்களும் உறுதுணைபுரிகின்றனர்.

சமய வாழ்க்கையில் வழிபாடு முதலிடம் வகிக்கின்றது. வழிபாடு தான் எமது முயற்சிகளுக்கும் பயிற்சிகளுக்கும் ஏதுகோலாக அமைந்துள்ளது. எமது வழிபாடு கூட்டு வழிபாடாகவே காணப்படுகின்றது. இதற்கு சான்றாக விளங்குபவை ஆலயங்களே எமது சமுதாய கட்டுக்கோப்பு பண்பாடு ஒற்றுமை இவை அனைத்தினையும் வளர்த்தெடுப்பதில் ஆலயம் பிரதான இடத்தை வகிக்கின்றது. இதனாலன்றோ பண்டைய மன்னர்கள் முதல் தற்காலம் வரை ஆலயத்தை அமைப்பதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம்.

வழிபாட்டுத்தலமாக மாத்திரமன்றி அழகுக் கலையாகவும் ஆலயங்கள் திகழ்கின்றன. மேலும் எமக்கு திருமுறை தந்த நாயன்மார்கள், சமயச் சான்றோர்கள் அனைவரும் ஆலயத்தையொட்டிய வழிபாட்டு முறையினையே எமக்கு விட்டு சென்றுள்ளனர். இவை தவிர சைவசமயம் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சைவ நாற்பதங்களை ஒழுங்குற ஒழுகுவதற்குரிய இடமாக இருப்பது ஆலயங்களே.

ஆகவே சமயத்தோடு கூடியதான ஆலயவழிபாடு எமது வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறுகின்றது. அதனாலன்றோ

***"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"***
***"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்."***

என்று ஆன்றோர் கூறியுள்ளனர்.

எமது சமய வழிபாட்டு முறைகள் நன்கு விசாலமானதாக இருந்த போதும் தற்காலத்தில் சமய உண்மைகள் வழிபாட்டு முறைகள் இளம் சந்ததியினர் மத்தியில் புதிராகவும் கைவிட்டுச் செல்லும் நிலையிலும் காணப்படுவதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இதற்கு காரணம் நாமே. எம்மால் சமய பாரம்பரியங்கள் வழிபாட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றதா?

***"தலைவர் எவ்வழியோ மக்களும் அவ்வழியே"***

என்ற கூற்றுக்கு ஏற்ப முதியவர்கள் பின்பற்றும் நடவடிக்கைகளையே இளையவர்களும் பின்பற்றுவார்கள். எனவே பெற்றோர்கள் பெரியவர்கள் சமய பாரம்பரிய பண்பாடுகளை ஏற்கும் போது இளையவர்களும் அவ்வழியைக் கடைப்பிடிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இல்லங்களில் பெற்றோர்கள் கடைப்பிடிக்கும் வழிபாடு முறைகள் விரதங்கள், அனுஷ்டானங்கள் அனைத்தும் குழந்தைகளின் சமயப் பற்றுதல் நம்பிக்கைகளுக்கு வழிகாட்டியாக அமையும் இறைவனின் அன்பை அவனது கருணையை குழந்தைகள் மத்தியில் பெற்றோர்கள் இல்லங்களில் வழிபடும் போது எடுத்துரைக்க வேண்டும். இறைவனின் பெருமை கூறும் புராண இதிகாசக் கதைகளை எடுத்துக் கூறவேண்டும். "காதலாகி கசிந்து கண்ணீர்மல்க" கூடியதான தேவார திருவாசங்களை இல்லங்களில் ஓதவேண்டும். அப்போது தான் குழந்தைகளுக்கு இறைவனை உணர்வதற்கும் பழிபாவங்களுக்கு அஞ்சி வாழ்க்கையில் ஒழுக்க நெறியினை கடைப்பிடிக்கக் கூடிய சிந்தனைத்திறன் ஏற்படும்.

எனவே இளையவர்களை குறை கூறுவதில் பயனில்லை முதியவர்கள் முன்னோடியாக இருக்க வேண்டும். இறைவனை

***"அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே"***

*என்றார். திருவாதவூரர்.*

***" தாயினும் நல்ல தலைவர்"***

என்றார் திருஞானசம்பந்தர் இவ்வாறு இறைவன் மீது ஆழ்ந்த அன்பை வைத்து அருள் பெற்றார்கள். அடியார்கள் இதனையே இல்வாழ்க்கை வாழ்ந்து நாம் காணும் இன்பங்களையெல்லாம் விட மேலான பேரின்பம், இறைவனின் திருவருளை பெறுவதே என்பதை சமயநூல்களும் சான்றோர்களின் வாக்கும் எமக்கு உணர்த்துகின்றன.

தொடர்ச்சி 14ம் பக்கம்

# திருமந்திரம் வேதாகம சாரம்

திருமந்திரம் தமிழ் ஆகமம். இம்மந்திரத்தை நமக்கு அருளிச் செய்தவர் திருமூல நாயனார். இவர் கி.பி 8ம் நூற்றாண்டைச் சேர்ந்தவரெனச்சிலரும், அக்காலத்திற்கு முற்பட்டவர். எனச் சிலரும் சொல்லிக் கொள்கிறார்கள். திருக்கைலாயம் இவரது இருப்பிடம். சிதம்பரத்திலே நடராஜப்பெருமானின் திருநடன தரிசனம் பெறுவதற்காக ஒருமுறையும் தனது நண்பன் அகத்தியமுனிவரைக் காணும் போது இன்னொருதரமும் தமிழ் நாடுவந்தவர். தமது சீடர்கள் எழுவர்மூலமும் பதி,பசு, பாசம் ஆகிய சித்தாந்த இலக்கணங்களை உலகோரிடம் பரப்பும் நோக்கமாக அவர்களைக் கொண்டு ஏழு மடங்களைத் தோற்றுவித்தவர். இவர் இரண்டாம்முறை தமிழ் நாடு வந்தபோது, மூலன் என்னும் பெயரால் வாழ்ந்தவர்.

தமிழ் நாடு திருவாவடு துறையில் சிவன் கோயில் மேற்கில் அரசமரநிழலில் சிவயோக நிஷ்டையில் அமர்ந்திருந்து, ஒவ்வொருமுறை கண்விழிக்கும் போதும் ஒவ்வொரு பாட்டாக மூவாயிரம் மந்திரங்களையும் பாடித்தந்துள்ளார். இப்பாடல்கள் நான்கு அடிகளைக் கொண்ட சதுரப் பாடல்களாகும். இப்பாடல்களை ஒரு ஓலைச் சுவடியில் எழுதி திருவாவடுதுறை பிரானார் கோயில் பலிபீடத்தின் கீழ் நமக்குக் கிடைக்கும் பொருட்டுச் சேமித்துவைத்து விட்டு பரகதி எய்தினார்.

இவர் பாடித்தந்த மூவாயிரம் தமிழ் பாடல்களும் திருமந்திர நூலாயிற்று. இம்மந்திரத்தைத் தமிழ் மந்திரம் எனவும் கூறுவர். இந் நாயனாரை ஒரு அவதார புருடரென்றே கூறிவிடலாம். ஏனெனில் இவர் வினைப் பயனை அனுபவிக்கப் பிறந்தவர் அல்லர். முன்னை வினையின் முடிச்சை அவிழ்த்தவர். பின்னை வினையைப் பிடித்துப் பிசைந்தவர்.

தமிழ் மொழியில் வேதம் சூத்திரமாகவும் ஆகமம் அதன் நாடியாகவும் விளங்குகின்றன. வேதம் பொதுவானதாக அமைய ஆகமம் அதன் சிறப்பு நூலாக அமைகிறது. தற்காலத்தில் ஆகமங்கள் கிரந்த எழுத்துக்களிலும் நாகரி எழுத்துக்களிலும் காணப்படுகின்றன. முன்னர்க்காலத்தில் அதாவது 4ம் 3ம் நூற்றாண்டுக்கு முன்னர் வேதங்களும் ஆகமங்களும் தமிழிலேயிருந்தன. என அறிய முடிகிறது. தமிழ் ஆகமங்களை வடமொழியாளர் அறிந்து கொள்ளும் பொருட்டு வடமொழி பயின்ற தமிழர் இவ் ஆகமங்களை சங்கத மொழியில் எழுதினார்கள். ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பெற்றபின்பு பின்வந்தவர்கள் யாரோ தமிழில் இருந்த ஆகமங்களை அழித்துவிட்டனர். இவ்வாறு அழிக்கப்பெற்ற தமிழ் ஆகமங்களைத் திருமூலர் தமிழில் மந்திரங்களாகப் பாடித்தந்துள்ளார். இவர் இருபத்தெட்டு ஆகமங்களில் ஒன்பது ஆகமங்களை மட்டுமே எடுத்துக் கொண்டார்.

சதாசிவ நாயனாரினால் வெளியிடப்பெற்றவை இருபத்தெட்டு ஆகமங்கள். இவைகளில் நந்தியெனப் பெயர் கொண்ட சீகண்டருத்திரருக்கு கிடைத்தவை :- காரணாகமம், காமிக ஆகமம், வீரஆகமம். சிந்தியாஆகமம்., வாதுளா ஆகமம், காலோத்ர ஆகமம், சுப்பிரதே ஆகமம், மகுடாகமம், ஆகியவைகளாகும். இவைகளையே தனது சீடர்களுக்கும் உபதேசம் செய்தும் திருமந்திரங்களாகவும் பாடித்தந்துள்ளார். ஒன்பது ஆகமங்களையும் ஒன்பது தந்திரமாக நமக்குத் தந்துள்ளார்.

இறைவன் ஒரு தனிப் பொருள். நாம் உய்ய வேண்டுமானால் நமக்கும் அவனுக்கும் இடையில் ஒரு இணைப்பு வேண்டும். அந்த இணைப்பே மந்திரம் எனப்படுவது. நிறைமொழி மாந்தராகிய பெரியோர்கள் நமக்காக உதவிய ஒரு பெரியதும் எளியதுமான ஏணியாகும். மந்திரமென்பது அதனைத் துணைக் கொண்டே இறைவன் எழுந்தருளியுள்ள இன்ப மாளிகையை நாம் அடைய வேண்டும்.
மந்திரம் என்னும் சொல் நினை இடைவிடாது நினை உன்னை எங்கும் காப்பாற்றுவேன் என்கிறது.

சிவாகமங்கள் தந்திரம், மந்திரம், உபதேசம் என மூவகை அங்கங்களைக் கொண்டது. வேதம் கருமகாண்டம், ஞானகாண்டம், உபாசனகாண்டம் என மூன்று வகையது. கருமகாண்டம் முன்பின் முரண்பாடுஇன்றி மேற்கொள்ளும் செயல்முறைகளை அறிவிக்கின்றது. இதுவே தந்திரமாகும். மந்திரக்கலை உபாசன காண்டம் பற்றியது. மனம் முதலியவற்றை அடக்கி தெய்வத்தை தியானித்து வழிபடும் முறையினை விபரித்துரைப்பது.
உபதேசக் கலையென்பது ஞானகாண்டம் பற்றி தனக்குத் தோற்றமும் ஈறுமில்லாத இறைவனுடைய தன்மைகளை தாம் உணருமாறும் பிறருக்கு உணர்த்து மாறும் அறிவுறுத்துவது.

மேற்கூறிய மூவகைத்திறங்களும் ஒருங்கமைந்த செந்தமிழ்ச் சிவாகமாக விளங்குவது திருமூலர் திருமந்திரமாகும்.

தந்திரம், மந்திரம், உபதேசம் மூன்றினுள்ளும் நடுவண் அமைந்திருப்பது மந்திரமாகும். இம்மந்திரம் முன்னுள்ள தந்திரத்துடனும், பின்னுள்ள உபதேசப்பகுதியினுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

சித்தாந்த சைவ நெறிகளை அறிந்து ஒழுகுவதற்கு ஆதரவாக உள்ளவை சாத்திரங்களும் தோத்திரங்களுமாகும். சாஸ்திரங்களை மெய்கண்ட சாஸ்திரங்கள் எனவும் தோத்திரங்களை பன்னிரு திருமுறைகள் எனவும் கொள்ளப்படுகிறது. திருமுறைகள் பன்னிரெண்டு. இவற்றில் பத்தாவது இடத்தை பிடித்திருப்பது திருமூலர் திருமந்திரம் ஆகும். ஒரு பிறவியிலே சிவகதி அடைவதற்கு வேண்டிய வழி முறைகளை அனுபவ முறையில் எடுத்தியம்புவது இத்திருமந்திரமாகும்.

இத்திருமந்திரம் பொதுப்பாயிரம், தற்சிறப்புப்பாயிரம் என இரண்டு பாயிரங்களை கொண்டது. பொதுப்பாயிரம் கடவுள் வாழ்த்து வேதச் சிறப்பு அந்தணர் நிலை அரணை வலியுறுத்தல் ஆகியவற்றை விளக்குகின்றது. தற்சிறப்புபாயிரம் குருபரம்பரை தம் வரலாறு ஆகியவற்றை விவரிப்பதாகும்.

திருமந்திரச் செய்யுள்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதால் ஒன்றை ஒன்று விளக்குவதாய் உள்ளன. மற்றும் ஒரு அதிகாரத்திற்கும் மற்றோர் அதிகாரத்திற்கும் தொடர்பு உண்டு. மேலும் இத்திருமந்திரத்தில் ஓர் ஒழுங்கும் தெளிவும் காணப்படுகிறது. ஆரம்பத்தில் மக்களுக்கு இன்றியமையாத அறவாழ்க்கை விபரிப்பதுடன் இறை நிலையை விளக்கி இறைநிலையை அடைவதற்குரிய யோக நெறிகள் பலவற்றையும் கூறுகின்றது. இறுதியாக யோகத்தின் மூல வேறான ஞானம் உணர்த்தப்படுகிறது. அதாவது "நான் உடம்பல்ல" "நான் அது" என்பதாகும். இல்லறத்தார் இன்பத்துய்ப்பிலே பேரின்பத்தை காணமுடியும் என வலியுறுத்துகிறது. முதியோர் பெறும் பயனை இளைஞர்களும் பெறலாம் என பேசுகிறது. வாழ்வில் பல நிலையில் உள்ளவர்களும் மேற்கொள்ளத்தக்க நெறி இத்திருமந்திரத்திலுண்டு. குடும்ப கட்டுப்பாடு பற்றி பேசுவோருக்கும் இக்காலத்திற்கேற்ப பயனுள்ள குறிப்புகளையும் இம்மந்திரத்தில் காணலாம். நாஸ்திகர்களையும் ஆஸ்திகராக்கி உய்தி பெறச்செய்யும் தகைமைகளும் சொல்லப்பெற்றுள்ளன. மந்திர வடிவான வேதங்களிலும் அவற்றின் வேதாகம திருமுறைகளிலும் பெருமான் விசேட சாந்நித்திய முற்றிருப்பார் என ஆணையிடுகிறது இம்மந்திரம்.

சிவபெருமானுக்கு மந்திரம் தூலசரீரம், ஆன்மா சூக்கும சரீரம் என ஆகமங்கள் விளக்கம் தருகின்றன.

இத்திருமந்திரம் தோத்திர நூலாக கருதப்படினும் சாஸ்திர நூலாகவும் விளங்குகின்றது. திருமந்திரம் வேத சாரம் என்பது நம்பியாண்டார் நம்பியின் கருத்தாகும்.

திருமந்திரத்தில் பல சக்கரங்களும் பீஜாட்சர மந்திரங்களும் கூறப்பெற்ற பொழுதும் அவற்றுக்கெல்லாம் மூலமாய் - வித்தாய் இருப்பது பஞ்சாட்சர மந்திரம் என அறையிட்டுக் கூறுகின்றது.

"நமச்சிவாய என்று இறைவனை அடைந்து அவனன்பிற்கே ஊணாகி அவனருளால் எங்கும் சிவமயங் கண்டு அவனறிவு முற்றி சிவோகம் பாவனையில் இரண்டறக் கலக்கும் பூரண யோக ரகசியத்தை திருமந்திரம் விரிவாக விளக்குகிறது.

திருமந்திரத்தில் அடங்காத வேதப் பொருள் ஆகம ரகசியங்கள் இல்லை. இதுகாணும் உலகில் தோன்றிய சமயப் பெரியார்களின் எண்ணங்களும் ஞானிகளின் கருத்துக்களும், யோகியர்களின் அனுபவங்களும், ஜீவன் முத்தர்களின் இயல்புகளும் அருட் புலவர்கள் கண்ட தத்துவங்களும் அறிஞர்கள் அறிந்த அறிவுகளும் இத்திருமந்திரத்தகத்தே அடங்கியுள்ளன.

திருமூலருடைய அருளை பெற வேண்டுமாயின் அவ் அருளைக் குரு வழியாக பெறவேண்டும். குரு கிடைக்காதவிடத்து திருமந்திரப் பாடல்களை ஒவ்வொன்றையும் தியான மந்திரமாகக் கொண்டு தியானித்தல் வேண்டும். அருளின் அளவு தியானத்தின் அளவை பொறுத்ததாகும்.

**"செற்றிலென் சீவிலிலென் செஞ்சாந் தணியிலென்**
**மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்**
**வித்தகன் நந்தி விதிவழியல்லது**
**தத்து ஞானிகள் தன்மை குன்றாரே"**

திருமந்திரம்

திருமந்திரமானது சாதாரண கவிதைகளைப் போல இலக்கிய இன்பத்தை வழங்குவதற்காகச் செய்யப்பட்ட காவிய நூல் அல்ல. அப்பாடல்களில் காணப்படும் சொற்கள் அனைத்தும் தவத்திலிருந்து பிறந்தனவாம். ஆன படியால் அச்சொற்களின் ஒலியினும் நடையினும் இலக்கிய பண்பாடு ஒரு தனியான சக்தியை தருகிறது. சரீரத்தில் நிற்கும் - உறைந்திருக்கும் - மெய்ப்பொருளை நேரிலே கண்டறிந்த திருமூலர் நமக்குத்தந்த பொக்கிஷம் இத்திருமந்திரமாகும். இதனை நாம் என்றும் போற்றி பாராயணம் செய்து உய்வோமாக.

# காற்றாய் வருவேன்

திருமலை சுந்தா — நெறிக்கதை

சிவன்கோவிலடி புழுதிமண் பம்பரம் போல சுழன்று கொண்டிருந்தது. 'ஓம்' என்ற இரைச்சலுடன் சோளகம் வீசி அந்த கோவில் சூழலை திருத்திக்கொண்டிருந்தது. சோளகத்தால் திருத்தத்தான் முடியுமே தவிர சுத்தப்படுத்த அதனால் முடியாது.

திருத்தம், சுத்தம் இந்த இரண்டு சொற்களையும் உச்சரித்து எதை, எதையோ அசை போட்டவண்ணம் அவன் சிவன் கோவிலை நோக்கி நடந்துகொண்டிருந்தான். வீசும் சோளகம் அவன் உடலை ஆரத்தழுவி தள்ளி, இழுத்து அவனோடு விளையாடிக்கொண்டிருந்தது. அவனும் சோளகத்துடன் கண்களைக் கசக்கி, கசக்கி கண்ணீரைத் துடைத்து, துடைத்தே கால்களை சிவன்கோவிலடி மண்ணில் புதைத்துக் கொண்டிருந்தான்.

பதினாறு வருடங்கள் அந்தப் பக்கமே எட்டிப் பார்க்காத இவன் சிவன் கோவில் கும்பாபிஷேகம் ஆகி இந்த ஒரு வருடம் ஆகவே வந்துகொண்டிருக்கின்றான். இந்த பதினாறு வருடங்களுக்கு முன்னால் அதன் காலடி படாத இடமே இல்லை என்ற அளவுக்கு....... இந்த பதினாறு வருடங்கள் சிவன் கோவிலுக்கு நேர்ந்த கதி அவன் மனதை இறுக்கி என்னென்னமோ நினைவுகளையெல்லாம் உண்டாக்கியது. என்பது உண்மைதான்.

அப்போதெல்லாம் அவன் காலாற நடந்து ; பத்திரகாளி அம்பாள் சந்நிதானத்தில்; யாருமே அற்ற சூழலில் அமைதியாக அமர்ந்து அந்த சிவனுக்கு நேர்ந்த கதி பற்றியும் அம்பாளுடன் பேசிக்கொண்டிருப்பான். அம்பாள் பேசமாட்டாள். அவன் கண்களுக்கு மட்டுமே அம்பாள் பேசுவது தெரியும் கூர்மையான தனது காதுகளை தனக்காக அம்பாள் ஈய்வது அவனுக்கு புரியும்

'கோவில்கள் ஏன்? கோவில்களில் பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள் தோன்றினால் என்ன? மனிதர்களுக்கு சேவை செய்வது பகவானுக்கே செய்கின்ற பூசையாகாதா?'

1983,1990 இப்படி, இப்படி எத்தனை ஆண்டுகள் சிவனார் அந்த ஆமிக் காரர்களால் அடிவாங்கியுள்ளார். திருக்கோணமலையில் யுத்தவெறி பிடித்த பெரும்பான்மை ஆயுததாரிகளுக்கு அப்படியேன் சிவனார் கோபத்திற்கு உள்ளாகினார்? தங்கள் சமூகத்தின் எதிரி சிவனார் என்றா அவர்கள் அப்போழுது, அப்பொழுது நினைத்தார்கள்.

உடைபட்ட மண்டபங்களும் சிதைந்த திரு விக்கிரகங்களும், எரிந்த கோயிலும் அவனுக்கு எப்படியோ, எப்படியோ மனநிலைக்கு ஏற்றவாறு எண்ணங்களை உண்டாக்கிக்கொண்டிருக்கும்.

எண்ணங்கள், சிந்தனைகள் முடிவுகள் அல்லவே. அந்த முடிவுகள்தான் என்ன என்பதற்காகத்தான் அம்பாளுடன் வாரத்திற்கு ஒருமுறையாவது அவனது சந்திப்பு இருந்தது. அவனது உடல் சந்திப்பு எப்படி இருந்தாலும் அவனது உளச் சந்திப்பு, அவன் பத்திரகாளி அம்பாளுடன் என்றும் காற்றோடு காற்றாய் கலந்து பேசிக்கொண்டேயிருப்பான்.

இந்துக் கல்லூரியில் அவன் படிக்கின்ற காலத்தில் அவனின் காவல் தெய்வம் காளியாச்சி இங்கிலீசில் அவன் அப்பொது கொஞ்சம் மட்டம். சிவபாலன், தங்கராசா ஆசியர்களின் இங்கிலீஸ் பாடமென்றால் அவனது வாய்க்குள்ளால் இங்கிலீஸ்...இங்கிலீஸ் ஆக வருபவள் காளியாச்சியே! இந்த வாத்திமாரைக் கண்டால் இரவு முழிச்சு பாடமாக்கிய இங்கிலீஸ் "பொயம்" மறந்தே போகும். அப்போது அவனுக்கு துணைவருபவள் காளியாச்சியே. காளியாச்சி சில வேளை "பொயமை" மறந்து போக அடிவாங்கிய கன்னத்துடன் பாடசாலை முடிந்து பத்திரகாளி கோவிலுக்கு முன்னால் நின்று அவன் ஆச்சியை பேசியதுண்டு.

அடுத்தநாள், "என்ற ஆச்சியல்லோ கோவிக்கிறியே" - இப்படிச் சொல்லி கற்பூரம் ஏற்றி அவன் அப்போது அப்போது அவள் துணைநாடியதும் உண்டு.

தேங்காய் உடைக்கின்ற போதும் தேங்காய் சிதறி, காய்ந்து போன சிரட்டைத் துண்டுகள் இருந்தால் அவன் அதை எடுத்து காற்சட்டைப் பொக்கற்றுக்குள்போட்டுக் கொள்வான். அப்படி அந்த சிரட்டைத் துண்டுகள் இருந்தால் பள்ளிக்கூடத்தில் அடிவிழாது என்பது மட்டுமல்ல...... படித்த பாடங்களும் நினைவில் இருக்கும். என்பது அவனதுது நம்பிக்கை. அவன் மட்டுமல்ல அவனோடு பலரும் இப்படித்தான்; அந்த சிரட்டைத் துண்டுகள் பொறுக்குவதில் அந்த நாட்களில் இருந்திருக்கின்றார்கள். அந்த சிரட்டைத் துண்டுகள் பொறுக்கி இன்று சமூகத்தில் உயர் மட்டத்தில் இருக்கும் பலரைக் காணும் போது அவன் நினைப்பதெல்லாம்........

'காற்றாய் வருவேன்...... காற்றாய் வருவேன்'....... என அவன் மனதில் அறைந்து முதலிடம் பிடித்த அந்தக் காளியாச்சிதான்.

அந்த உயர் மட்ட பிரமுகர்கள் அவன் கண் முன்னால் அவனது சிரிப்பிற்கு ஆளாகுவதும் அதனால் தான் என்பது அவர்களுக்கு அப்போது புரிந்திருக்காது இப்போதாவது, இனியாவது புரிந்திருந்தால்........ அவன் யார் என்பது அவர்களுக்கு புரிந்திருக்கும் தானே!

கூட்டுப் பிராத்தனையை வெள்ளிக்கிழமைகளில் நவரத்தினம் ஆசிரியர் நடத்திவைப்பார். பிரின்சிபல் சிவபாலன் மதநம்பிக்கை அற்றவர். கம்யூனிஸ்ற். ஆனால் கூட்டுப் பிராத்தனையென்றால் பெரிய மாணவர்கள் வேட்டிகட்டி வரவேண்டும். என்று கண்டிப்பாக இருப்பார். அம்பாள் சந்நிதிதானததிற்கு வெளியே வந்து நிற்பார்.

மாணவர்கள் ஒழுங்காக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இவர்அப்போது அப்படி கோயிலுக்கு முன்னால் நிற்பதாக எண்ணினோம். ஆனால் பின்னால் அவர் நின்றதற்கு காரணம் வேறு என்பதை நான் அறிந்தபோது அந்த பத்திரகாளி அம்பாளின் சக்தி என்னுள் ....என்னுள்:.....

இப்படித்தான் ஒருநாள் அம்பாள் என்னோடு பேசும் ... பேசும்..... போது சொன்னாள்.
"நான் இருக்கின்ற கோயிலை உடைத்து தரைமட்டமாக்கி பள்ளிக்கூடமும், பாடசாலையும் கட்டி மனித சேவை செய்ய வேண்டுமென எனக்கு இடிச்சு சொல்கின்றாயே.......மகனே கொஞ்சம் சிந்தித்து பார் நான் சொல்வதை ....." நான் அம்பாளின் பேச்சை நடுவே குறுக்கிட்ட போது என்னைத் தடுத்து அவளே சொன்னாள்.

"புத்திபூர்வமான ஒரு தவறைச் செய்தால் தான் அது தவறாகின்றது. பாவமாகின்றது. புத்தி தங்களின் வசமில்லாத சூழலில் தற்காலிக இழப்புக்களின் பாதிப்பால் பேசும் உம் போன்ற சித்தப்பிரமை பிடித்தவர்களின் பேச்சிற்கு பரிகாரம் உண்டு.

மகனே காலம் காலம் சிவனாரின் அழிவை மனதில் வைத்து கோயில்கள், படசாலைகள் ஆனால் வைத்தியசாலைகளானால் அழிவிலிருந்து தப்பும் என நினைத்து மக்களுக்கு அது பெரிய சேவையாகும் என நினைத்துமே நீ இப்படியெல்லாம் பேசுவது எனக்கு விளங்காதா? நீ சொல்லுவதிலும் உண்மைகள் இருக்கின்றனதான். ஆனால்....... ஆனால்.........

சித்தப்பிரமை பிடித்தவர்கள் பேசுவதில்லை. மனதில் எது வருகின்றதோ அதையே அப்படியே சொல்லுகின்றார்கள். மனதில் வருவதெல்லாம் செயலல்லவே.

ஆஸ்பத்திரி உடல் வியாதியை தீர்க்கின்றது. ஆனால் அந்த நோயாளியின் மனதில் வழி உள்ள கெட்ட எண்ணங்களை தீர்ப்பது அதன் காரியமாகுமா? வைத்தியர் நோயை இனங்கண்டால் மட்டுமே அவரது சிகிச்சை பலன் அளிக்கின்றது. இனங்காணாது போனால் .........அந்த அறிவை ஊட்டுவது எது? எனவே உடல் வியாதியை விட உள வியாதியே உண்மையான தீர்வுக்கு பரிகாரம். அந்த அறிவின்கூடலே பரிகாரம். அந்த பரிகாரம் தான் கோயில்.

பள்ளிகள் கல்வியைப் புகட்டுகின்றன ஏன்? படிப்பை விருத்தி செய்ய......... அறிவை ஊட்ட மற்றபடி அந்த பள்ளியில் பெற்ற படிப்பையும், அறிவையும் வைத்துக்கொண்டு அயோக்கியத் தனங்களில் மொத்த உருவங்களால் மனிதர்கள் உருவாயினால்.... அந்தப்பள்ளிகளால் என்ன இலாபம்?? பள்ளிக்கூடம் வைக்கவேண்டும் என்று உமக்கு........ அதனால் என்ன பயன்? பக்தி, கட்டுப்பாடு, தியானம் முதலானதுகள் இல்லாமல் படிப்பால் வரும் புத்தியை மட்டும் வளர்த்துக் கொண்டால் சாதுரியமாக அயோக்கியத் தனங்கள் செய்தும் தப்பிக்கொள்வதற்குத் தான் வழியாகிறது.

வைத்தியசாலைகளாலும் பள்ளிக்கூடங்களாலும் மனிதர்களின் வாழ்வும் முடிந்து விடுவதில்லை. அவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். இப்படியான மனித வாழ்வில் முக்கிய பொருளான நல்லவராக்கின்ற நிலையங்களாக சந்நிதானங்கள் உருவாக்கவேண்டும். அந்தச் சந்நிதானங்கள் இல்லாமல் போனால் பள்ளிகளாலும் வைத்தியசாலைகளாலும் ஏது பயன் ?

மனித உடலுக்கு தேவை ஆரோக்கியம். புத்திக்குத் தேவை கல்வி. தரித்திரம் நீங்க செல்வம். இவையெல்லாவற்றையும் தருவது எமது தியானம். பூசைகளும், வழிபாட்டு முறைகளுமே ....மனிதனையே தெய்வமாக நினைத்து அவனுக்கு சேவை செய்வது சிவபாக்கியம் தான். ஆனால் நாம் அப்படி நினைப்பதோடு நிற்காமல் அவனே உண்மையாகத்தான் தன்தெய்வீகத்தை கொஞ்சமாவது தெரிந்து கொள்ள நாம் ஆலயங்களை அவசியம் பேணவேண்டும்.

காளியாச்சியின் குரல் அவனை...... அவன் எழுந்திருக்க மனமின்றி அம்பாள் சந்திதானத்தில் அம்பாள் சந்நிதானத்தில்..........

அவன் சிவனின் கும்பாபிஷேகத்தில் தன்னை ஒருவனாக்கனாக்கிக் கொண்டான். அந்தக் கோவிலில் அவன் தன்னை ஒருவனாக்கிக் கொண்டான்.

**அவன் தன்னை ஆக்கிக் கொள்ளவில்லை.**
**அவன் ஆக்கப்பட்டு விட்டான்.**
**ஆக்கியவள் பள்ளிப்படிப்பில் இருந்து இன்று**
**வரைஅவனுள் குடிகொண்ட அந்த பத்திரகாளி**
**ஆச்சியின் நெறிப்படுத்தலின் விளைவுகள்தான்**

சோளகம் சூழன்றுகொண்டிருந்தது. தோளில் தொங்கிக் கொண்டிருந்த சால்வையை இடுப்பில் சுற்றிக் கொண்டான். இரண்டு மாடுகள் அசை போட்டு கொண்டிருந்தன. காகங்கள் மூன்று அவைகளுக்கு பேன் பொறுக்கி கொண்டிருந்தன. காவலுக்கு படுத்திருந்த வீமன் நாயும் இவனை கண்டு வால் ஆட்டியது. அவன் சிவனின் முகப்பு தோற்றத்தைப் பார்த்தான்.

அவனுள் இப்போது.......... இப்போது................
பத்திரகாளி அம்பாளே புயல் போல அவன் உள்ளத்தில் சீறிக் கொண்டிருந்தாள்..... சோளகமும் ஆனாள்.

"என்னால் திருத்த முடியும். சுத்தம் பண்ண முடியாது – சோளம் அவனுக்கு அறைந்து மீண்டும் : மீண்டும் அவனது மறந்த மனதிற்கு எதையோ நினைவூட்டியது. அது.....

அம்பாளின் முன்னைய வார்த்தைகள் பல அவனை...............
உறுத்த... உறுத்த.... கண்களில் கண்ணீர் படர.............படர..................
சிவனாரின் வாசல் படியை கடந்து – கடந்து -------------
"நான் காற்றாய் வருவேன்....மகனே
நான் காற்றாய் வருவேன்.....மகனே-'
அந்த குரல்........அந்த குரல் .......சோளகத்துடன் .....சோளகத்துடன்.......
கோயில் சுத்தமாக்கப்பட்டிருந்தது.
அவனது உள்ளம். அது சுத்தமாக்கப்பட...........இன்னும் சுத்தமாக்கப்பட.............
பேசாத மௌனியாகி... பேசாத மௌனியாகி................
எத்தனை நாட்கள் - இனி எத்தனை நாட்கள்....அந்த சுத்தத்திற்கா...............
சுத்தமில்லாத இந்த மனதோடு போராடி....மன அழுக்கை கழுவி.......கழுவி.........
போராடி....போராடி...........

அவன் அந்த நம்பிக்கையோடு "காற்றாய் வருவேன்" என்ற அற்புத நாயகி பத்திரகாளி அம்பாளின் தாய்க் குரலோடு...... கலந்து..... கலந்து.....அந்த நம்பிக்கையோடு
அலுவலக கணக்குப்பிள்ளை ஜெயச்சந்திரனை
நோக்கி நடந்து கொண்டிருக்கிறான்.

**(கற்பனையல்ல)**

❖ கோபுரம் கட்டி எல்லார் கண்களிலும் பட வைத்து அம்பாளை ஞாபக மூட்டுவதை விடப் பெரிய சமூக சேவை இல்லை

❖ ஆடு, மாடு மாதிரி சாகாமல் சாந்தியும் ஆனந்தமும் நிரம்பி நம் உயிர் உடலிலிருந்து மறுபடியும் உடம்பு எடுக்காமல் இருப்பதற்காகத் தான் இத்தனை மதங்களும் உள்ளன. அம்பாளின் தியானத்தை விட வேறு மதம் வேண்டியதே இல்லை. சாந்தியும் ஆனந்தமும் தந்து நம்மை பூரணத்துவம் அடையச் செய்வது இதுவே.

❖ அழுக்குகளை அகற்றி விடலாம். இது எமது அறிவைப் பொருத்தது. ஆனால் மனழத மன அழுக்கு இருக்கின்றதே அதை அழிப்பதென்றால் அதற்கு வழி ? எமது அறிவு கூட இதற்கு பயன்படுமா உன்றால் சந்தேகமே. எமது அறிவுக்கு ஒரு துணை தேவை. அந்த துணை எது? அது அம்பாளின் சரணமொன்றே. அ்மபாளுடைய சரணவிந்தத் தியானம் தான் அதற்கான வழி. எமது அறிவுக்கு அதுவே நித்திய துணையானது.

❖ தெய்வங்களும், அவதார புருஷர்களும், மகான்களும் கூட அம்பாளை உபாசித்து அனுக்கிரகம் பெற்றிருக்கிறார்கள். ஆதிசங்கர பகவத் பாதர்களும், காளிதாசனும் அவளுடைய அனுக்கிரகத்தாலேயே விசேஷ வாக்குச் சக்தி பெற்றார்கள். திருஞானசம்பந்தருக்கு அவளது கடாட்சமே திவ்வியப் புலமை தந்தது.

❖ அம்பாளை தியானியுங்கள். உங்கள் உளம் கூறுவதை அவள் ஏற்று அதை தந்தே தீருவாள். நாம் கேட்கா விட்டாலும் அம்பாளை உபாசித்து விட்டால் அவளே அனேக அநுக்கிரகங்களை பண்ணுகிறாள்.

# சிவநெறி மண்டப வாசல்

சிசு

## இயற்கை மனிதனை எப்படி ஏமாற்றுகின்றது?

மனிதனுக்கு பலவிதமான இச்சைகள். அந்த இச்சைகளில் ஏற்படும் சுகத்தில், தான் ஆனந்தப்படுவதாக எண்ணிக்கொள்கிறான். உண்மை அதுவல்ல. இது அவன் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் தன்மையே. இச்சையும், இதனால் எழும் ஆசையும்,பாசமும் முதலியனவும் தீர்க்கப்படாதவைகளே. தொடர்பில்லா தண்டபாலம் போல அவை மனித வாழ்வில் நீண்டுகொண்டே போகின்றன. திருமணமும் அதனால் ஏற்பட்ட சுகத்தில் பிள்ளைகளும், பிள்ளைகளின் சுகத்தால் ஏற்பட்ட பேரப்பிள்ளைகளும், அவர்களது சந்தோசஷமும் இப்படி இச்சையின் இயல்புகள் மனிதனை தொடர்கின்றன. அவனும் தன்னைத்தானே உணர்ந்துகொள்ள முடியாத நிலையில் இச்சையை அது தான் முடிவென்று நினைத்து அன்போடு ஆராதிக்கின்றான்.

இச்சை தனது சுகத்திற்கே என நினைக்கின்றான். சுகம் என்பதன் முழுப்பொருளை அவனையடைய விடாது அவனது சிந்தனையானது அவனை அலைக்கலைக்கின்றது.

உயிர்கள் மறுபடி பிறவி எடுத்து தங்கள் கர்மவினைகளை அனுபவிக்கவே வேண்டும். எப்போது கர்ம வினை முடிவடைகின்றதோ அப்போதே மோட்சமும் ஏற்படுகின்றது. காமமும் கல்யாணமும், சந்ததியும் இவனது வாழ்வில் கரைந்து கர்ம வினையே தொடர்கின்றது. அவனும் ஆனந்திக்கின்றான். மனிதனுக்கு இப்படியான காமம், கல்யாணம், சந்ததி நினைவுகளை ஊட்டி அவனை திசைமாற வைப்பது எதுவென சிந்தித்தால் அது எதுவுமல்ல இயற்கைதான். எனவே இந்த இயற்கையின் இன்பங்களில் இருந்து மனிதன் விடுபடவேண்டும். இப்படியான சுகம் பொய்யென்பதை உணரவேண்டும். நித்திய இன்பம் எதுவென்பதைச் சிந்தித்து அது வழி எமது புலன்களை வழிநடத்திச் செல்ல வேண்டும்.

எனவே மனிதனின் கர்ம வினை தோற்றக் காரணியான இந்த இயற்கை அவனது வாழ்வின் பல இடங்களில் அவனை ஏமாற்றி தன்னையே இன்பப் பொருளாகக் காட்டுகின்றது. இப்படியே இயற்கையிடம் மனிதன் ஏமாறுகிறான்.

❖ **இயற்கை என்றால் என்ன? அம்பாள்தானே இயற்கை. அப்படியாயின் அம்பாள் எம்மை ஏமாற்றுகின்றாளா?**

மனிதன் கர்மத்தைச் சுமக்க உடம்பு ஒரு காரணி. உடம்பு என்றால் அங்கே நாவுக்கு வேலையுண்டு. நாவின் ருசி எமது உடம்பை வளர்க்கின்றது. ருசி ஒன்றானால் ஆகாரத்தில் எமக்கு ருசி ஏற்படுமா? அம்பாள் அந்த நாவிற்கு விதம்விதமான ருசியுணர்வுகளை ஊட்டியிருக்கின்றாள். உடம்பும் அந்த ருசி உணவில் ஆனந்தித்து தன்னை வளர்த்துக்கொள்கின்றது. இன்று ருசியாகச் சாப்பிட்டேன் என சந்தோசம் கொள்கின்றேன். இந்த சந்தோசம் கர்மாவை மீண்டும் மீண்டும் பல பிறவிகள் எடுக்க வழிகோலுகின்றது. இயற்கையின் விம்பமான அம்பாள் இந்த இடத்தில் தான் மனிதனை ஏமாற்றுகின்றாள். அவளது ஏமாற்ற நாடகத்தில் நாம் சிக்காது தப்புவது எமது தியான வழி மூலம் அம்பாளை அணுகுவதைப் பொறுத்ததே.

நான் எனது என்று சொந்தம் கொண்டாடுகிறாள். உடல், உயிர், பொருள் இம் மூன்றையும் நான் எனது என்ற கர்மவினை காரணிக்கு தன்னைய.றியாமல் முதலிடம் கொடுக்கின்றாள். இந்த சிந்தனையில் நிறைந்திருப்பவள் யார்? அம்பாள்தான். மனிதன் இந்த இடத்திலும் ஏமாறுகின்றான்.

வழியில் தங்க நாணயங்கள் கொட்டிக்கிடந்தால் அதை அனுபவிக்க எமக்கு உரிமை இருக்கின்றதா?? அந்த நாணயங்கள் எங்களுடையது அல்லவே. ஆனால் அவைகளை அனுபவிக்க வேண்டுமென்ற சிந்தனை ஏற்பட்டால் அதில் யார் குற்றம்? சிந்தனையை ஊட்டுபவள் அவள். சிந்தனையில் இருந்து வெளிச்சம் பெற வேண்டியவன் மனிதன். அவனது சிந்தனையில் வெளிச்சம் போடுபவள் யார்? அவள் வேறுயாருமல்ல. அம்பாள்தான். எது சரி எது பிழை என்பதெல்லாம் ஐயம் திரிபட மனம், உடம்பு, வழி எழும் கர்மவினை முளைகளைக் கிள்ளி கிள்ளிஎறிய நாம் நாடவேண்டியது அம்பாளின் திருவருள் கடாட்சத்தையே அவளின் ஏமாற்று வலையில் வீழ்ந்து விடாது நாம் நம்மைத் தயார்படுத்தி கொள்ளவேண்டும். அதற்கு வழி தியானம் தான். இந்த வழி காம, குரொத,

லோப, மோக, மத, மாத்சரியங்களை நீக்கி அவளின் ஏமாற்று நாடகத்தில் இருந்து தப்பிக்கொள்வோமாக.

**இராஜ கோபுரம் காணும்**
**வேதாகமமாமணி :- பிரம்ம ஸ்ரீ சோ. ரவிச்சந்திர குருக்கள்**

4ம் பக்கத் தொடர்ச்சி

புதுக்கோவில்கள் பல உருவாகின்றனவே? என நான் இழுத்த போது அவரின் முகத்தில் புன்முறுவலைக் காண முடிந்தது. காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகளின் கருத்தே என் கருத்தும். இதை பல இடங்களில் இது சம்பந்தமானவர்களோடு பேசும் போது குறிப்பிட்டு இருந்தேன்.

"பாழடைந்த கோவில்களை புதுப்பிப்பதை மறந்து புதுக்கோயில்கள் உருவாவது நல்லதற்கு அல்ல". நான் மடத்தடி வீரசக்தி பிள்ளையார் ஆலயத்தை நினைத்துப் பார்த்தேன்.

நீங்கள் ஏன் இதைக் கேட்டீர்கள் என்பது எனக்கு விளங்குகின்றது. நீங்கள் நினைக்கிற மாதிரி எல்லாம எம்மால் நிறைவேறுவதல்ல. நாம் நிறைவேற்றும் சேவகர்களே அன்றி நிறைவேற்ற ஆணையிடுபவர்கள் அல்ல. அந்த சக்தி அந்த பரம்பொருளான பராசக்திக்கே உண்டு.

ஏன் இதனைக் குறிப்பிடுகின்றேன் என்றால் நான் எதையும் அம்பாளை முன் நிறுத்தியே அவளை நினைத்தே முடியாத காரியங்களைக் கூட ஆரம்பிப்பேன். அவள் கடாட்சம் எப்படியோ அது அப்படியே நடந்தே தீரும்.

"அதற்கு ஒரு சாட்சி நிறைவேறப் போகும் எமது ஆலய கும்பாபிஷேகமும், இந்த இராஜகோபுரமுமே. என்னைப் பொறுத்தவரை நானா துரும்பு. எனது உடம்பு வலு எல்லாம் பத்திரகாளி அம்பாளே. அவள் திருவருளே அருள். அவள் அருள் என்றும் இம் மக்களையும் மண்ணையும் ஏனைய உலக மக்களின் துயரையும் போக்குமென நான் நம்புகின்றேன்". ஐயா தன்னை மறந்து கூறினார்.

மழைத்தூறல் நின்றுவிட்டது. குருக்கள் ஐயா வீட்டு முற்றத்து வெள்ளம் தானே வடிந்துகொண்டிருந்தது.நான் கரங்களைக்குவித்தேன்.அவர் என் கரங்களை தன் கரங்களால் அணைத்துக் கொண்டார்.

"பார்த்துப் போங்கள் வெள்ளம் இன்னும் வடியவில்லை" நான் குருக்கள் ஐயாவைப் பார்த்தேன் அவரும் அவர் நின்ற அந்த பழைய கால திண்ணையும் அந்த சிற்றோடு வீடும் என் கண்களுக்கு இன்றும் இன்றும்...

நான் பத்ரகாளி அம்பாள் தேவஸ்தான மேற்கு வீதிக்கு காலடிவைக்கத் தொடங்கினேன்.

**********************

**மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி சமைப்பதே**
**சமய வழிபாடு**

தொ. 7ம் பக்கத் தொடர்ச்சி

இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதத்திலே கர்ணன் ஓர் மாவீரனாக காட்டப்படுகின்றான். கன்னகுண்டலங்களோடும் கவசத்தோடும் அவதரித்தவன் யாவரையும் அழிக்கக்கூடிய நாகக்கணையை ஆயதமாகக் கொண்டவன் இவ்வாறான அந்த மாவீரன் கொடையில் சிறந்தவன். சத்தியத்திற்கு கட்டுப்பட்டவன். ஆனால் அவன் பெருமை கொள்ளவில்லை. இதனை வைத்து தன்னை எதிர்ப்பவர்கள் அனைவரையும் அழித்து நாடு முழுவதற்கும் தானே மன்னனாக வரவேண்டும் என்று கனவில் கூட நினையாதவன். அவன் இழைத்த தவறு என்ன கயவர் பக்கம் சார்ந்து நின்றதுதான். கர்ணனது கொடைச் சிறப்பையும் சத்தியத்தையும் கருவியாக வைத்தே அவனை பலவீனனாக்கி போரில் வென்றனர். இவ்வாறுதான் புராண இதிகாசங்கள் எமது வாழ்க்கை நெறியில் நாம் சத்தியத்திற்கு கட்டுப்பட்டவர்களாகவும் தான தர்மத்திற்கு வழி செய்பவர்களாகவும் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

நாம் வழிபாட்டில் ஈடுபடுவது எதற்காக? நல்ல காலச்சூழல் ஏற்படவேண்டும் நல்ல சமூகம் உருவாக வேண்டும். நல்லாட்சி நிலவ வேண்டும். தான தர்மங்கள் தழைத்தோங்க வேண்டும். இதற்காகவே மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிபாட்டில் ஈடுபடுகின்றோம். என்பதை நாம் உணர்வோம்.

***"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்."***

# நலம் தா தாயே!

01. திருமலையின் நாயகியே, சிவனாரின் பங்கினளே, சீரின் தாயே,
தெருவோரம் இருப்பாகிச் செந்தமிழின் இசைகேட்கும் செவிகொண்டாளே,
ஒருநாளும் குறையாமல் ஊராரின் 'பக்தி'யிலே ஊறும் தேவி
வருநாளில் உந்தனது வழிகாட்டலில் உண்டெம் வாழ்க்கையம்மா!

02. பல்வேறு தெய்வங்கள் பாரெங்கும் கண்டாலும் பத்ரகாளி
எல்லாமுன் 'சக்தி'க்கு இணையாக முடியாதென் றெண்ணலாலே
இல்லாமல் குறைதீர இங்கேயே வருகின்றார் எங்குள்ளோரும்!
நல்லாக்கவில்லையெனில் நாம்வேறு, நீவேறாய் நடந்தும் போகும்!

03. ஏதேதோ செய்கின்றார் – எல்லாமே ஏற்கின்றாய் ஸ்ரீ ஏற்றால் போதா!
ஏதேனும் நீயும்செய்! இப்படியே சும்மாநீ இருப்பாயானால்
பாதாளம் சென்றுவிடும், பரிதாபச் சிறுபான்மை! பகைமை நாட்டில்
தீதான வழிஓடும், தீராத சிக்கல் இனும் சிக்கலாகும்!

04. ஒருவரது உரிமைகளை ஒருவர் பறித்திடலாமா ஓய்வில்லாமல்?
வருவோர்கள் இருப்போரை வதைகள்செய்திடலாமா? வாயால்கேட்டும்
தருவதெனப் பொய்கூறித் தாரணியை ஏமாற்றித் தடுக்கலாமா?
இருக்காதே சும்மாநீ! ஏதோசெய், அழிவாக்கம் இரண்டிலொன்று!

05. பார்த்தாயா உன்மக்கள் படும்பாடுகளையெல்லாம்? பார்க்கும்போதில்
வேர்க்காதா உந்தனுடல், வேகாதா உள்நெஞ்சம், விளையாட்டாமா?
நீர்ப்பாசி போலன்றோ நிலையற்றுத் திரிகின்றார் நீண்டகாலம்!
தீர்ப்பாயா அல்லதவர் திருவிளையாட்டை நீயும் செய்குவாயா?

06. சொல்லாமல் பேசாமல் சோர்வோடு செல்கின்றார் சொந்தம்விட்டே!
நில்லாமல் போவோரை நிற்பாட்டமுடியாமல் நீடிக்கின்றாய்!
எல்லாமுன் எண்ணந்தான் என்னென்று சொல்லத்தான் இயலவில்லை!
வல்லாளே, உன்செயலை வடிவாக – விரைவாக வரமாய்க்காட்டு!

07. போனதெலாம் மீட்டிடவே போராடப்போவதுவும் புதிதா தாயே?
ஆனமகி டாசுரனை அடக்கவே நீ அன்று அமர்செய்தாயே!
ஈனத்தை விளைவிக்கும் இவ்வசுரகூட்டத்தை என்றொழிப்பாய்?
மோனமாய் இன்றுள்ளாய், மோதிஒருநாள் உந்தன் முடிவைக்காட்டு!

08. மண்ணழித்து நெறியழித்து மாறாத காலையழித்து மறைத்தமிழ்நூல்
கண்ணழித்து உயிரழிக்கும் காலத்தும் பேசாமல் காத்திருந்தால்..........
விண்ணுலகம் நிரம்பிவிடும், வீரமாகாளிகையே விடுவாய் சூலம்!
பண்ணோடு பாடல்தரப் பாவலர்கள் காத்துள்ளோம், பறித்தே தாதா!

09. கட்டாயம் இதனைச்செய், கடமைதனை மறவாதே, கடைசிக்காலம்
வீட்டோடிப் பாகத்தார் வெப்பக்கண் பெற்றேனும் விளையாடப்பார்!
சுட்டெரித் தெல்லாமே சுடுகாடாய் மாறச்செய், சும்மாவல்ல!
பட்டதெலாம் போதும்தாய், படமுடியாதினியம்மா பறந்தேபோய் வா!

10. நெஞ்சகமே உன்கோயில், நினைவெல்லாம் உன்வாடை, நிகழ்த்தியுள்ள
செஞ்சொல்லால் கவலாதே, 'சிவநெறி' யை மறவாதே, தீமையெல்லாம்
பஞ்சாகிப் பறக்கட்டும், 'பக்தி' மழை பொழியட்டும், பாரில் சிந்தும்
நஞ்செல்லாம் கழியட்டும், நல்லமுதல் நிறையட்டும், நலம்தாதாயே!

தாமரைத்தீவான்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும்
சமயப்பணியும், சமூகப்பணியும் அகதிகளுக்கான
பணிகளையும் ஆற்றுகின்ற முதன்மையான
இளைஞர்களின் அமைப்பே

திருக்கோணமலை மாவட்ட

# இந்து இளைஞர் பேரவை ஆகும்.

இதன் வளர்ச்சிக்குத் தாராளமாக
உதவுங்கள்